# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2305 - 2022 නොවැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2022.11.04

*2305 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | *292* |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | *296* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2022, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பகமுவ கோரளை பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் சிதாரா ருவினி கமகே ஆகிய நான், காணி அபிவருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1985.01.30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுள/பி/2065 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கடவளை எனும் முகவரியில் வசிக்கும் திரு. தந்து கெதர விதானலாகே பீரிஸ் சிஞ்ஞோ என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கம்பளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. பீ. 1/259 ஆம் இலக்கத்தின் கீழ் 1986.09.04 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை, எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.12.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின் அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் அம்பகமுவ பற்றில்/கோறளையிலுள்ள கடவளை (அம்பகமுவ கிழக்கு) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கடவளை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்களத் தாளில் பி. பி. க. 293 ஆவது வரைபடத்தில் 33 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் றூட் 01 பேர்ச்31 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு:*

*வடக்கு : பி. பி. க. 293 வரைபடத்தில் காணித்துண்டு இல. 31;*
*கிழக்கு : பி. பி. க. 293 வரைபடத்தில் காணித்துண்டு இல. 32;*
*தெற்கு : பி. பி. க. 293 வரைபடத்தில் காணித்துண்டு இல. 34;*
*மேற்கு : பி. பி. க. 293 வரைபடத்தில் காணித்துண்டு இல. 35.*

*சிதாரா ருவினி கமகே,*
*பிரதேச செயலாளர்,*
*அம்பகமுவ கோரளை,*
*கினிகத்தேனை.*

*2022, ஒகத்து 24.*

*11 - 60/1*

---

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பகமுவ கோரளை பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் சிதாரா ருவினி கமகே ஆகிய நான், காணி அபிவருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தராம் சனாதிபதி அவர்களால் 1988.03.25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுள/பி/5395 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான அப்கட் எனும் முகவரியில் வசிக்கும் மரக்கல மானகே விமலதஎச என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கம்பளை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. பீ. 03/252 ஆம் இலக்கத்தின் கீழ் 1990.08.16 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை, எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.12.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின் அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் அம்பகமுவ பற்றில்/கோறளையிலுள்ள மஸ்கெலியா (ஸ்ரெஸ்பி) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அப்கட் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்களத் தாளில் பி. பி. நு. 1115 ஆவது வரைபடத்தில் 16 இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்ட தும் 0.103 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு:

காணியின் பெயர் - கவரவில II

வடக்கு : பி. பி. நு. 1115 வரைபடத்தில் காணித்துண்டு இல. 08 மற்றும் கவரவில தோட்டம்;
கிழக்கு : கவரவில தோட்டம்;
தெற்கு : பி. பி. நு. 1115 வரைபடத்தில் காணித்துண்டு இல. 18 மற்றும காணித்துண்டு இல. 15;
மேற்கு : பி. பி. நு. 1115 வரைபடத்தில் காணித்துண்டு இல. 15 மற்றும் காணித்துண்டு இல. 08.

சிதாரா ருவினி கமகே,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்தேனை.

2022, மார்ச்சு 24.

11 - 60/2

---

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்பு பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்மலை பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் ஆகிய ஓ. சுரங்கி பெரேரா ஆகிய நான் காணி அபிவருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 2000.10.05 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நு/கொத்/திஸ்/3/பிர/கொ/53 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான இல. 03 - திஸ்பனை எனும் முகவரியில் வசிக்கும் திசாநாயக்க முதியன்சேலாகே டிங்கிரி மெனிகே என்பவருக்கு கையளிக்கப்பட்டு, நுவரெலியா மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் 156/1286/2000 ஆம் இலக்கத்தின் கீழ் 2000.11.24 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமைக்கு எவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகிறேன். இது தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின்அவற்றை 2022.12.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின் திஸ்பனை கோரளையில் கட்டுகொல்ல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திஸ்பனை - உடகம்மெத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நுவரெலியா நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. - வெளிக்கள தாளில் நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட 1350 மூல வரைபடத்தில் 39 ஆம் இலக்க துண்டு எனக் காட்டப்பட்டுள்ள 0.095 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள கீழ்க் குறிப்பிடும் எல்லைகளை கொண்ட அரச காணி - திஸ்பனேவத்த:

வடக்கு : துண்டங்கள் 40, 41, 42;
கிழக்கு : துண்டங்கள் 42, 43;
தெற்கு : துண்டங்கள் 44, 38;
மேற்கு : துண்டங்கள் 38, 37.

ஓ. சுரங்கி பெரேரா,
பிரதேச செயலாளர்,
திஸ்பனை உப அலுவலகம்.

2022, யூன் 23.

11 - 60/3

இணைப்பு - 09

### காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்பு பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெவியா பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1995, ஏப்பிறல் 28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/நுவ/497 ஆம் இலக்க அளிப்புபத்திரத்தின் உரிமையாளரான மிஹிந்துபுர என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி மர்லியா உம்மா என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர், அலுவலகத்தில் நுவ/12/263/95 இலக்கத்தின் கீழ் 1995.09.05 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமைக்கு எவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.12.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒய பலாத்த பற்றிலுள்ள/கோரளையிலுள்ள மிஹிந்துபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சீதாஎலிய என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் - பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - இலக்க வெளிக்களத் தாளில் பின்னிணைப்பு இலக்க 4 இறுதி வன நில அளவை ஆரம்ப வரைபடம் 53B ஆம் இலக்க துணடு பிரிக்கும் வரைபடத்தில் 264 ஆம் இலக்க காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ஏக்கர் 0.054 ரூட் இல்லை விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணி துண்டு:*

வடக்கு : துண்டு இலக்கம் 263 மற்றும் 168;
கிழக்கு : துண்டு இலக்கம் 266;
தெற்கு : துண்டு இலக்கம் 265;
மேற்கு : துண்டு இலக்கம் 265 மற்றும் 263.

ஏ. ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2021, நவெம்பர் 15.

11 - 60/4

---

இணைப்பு - 09

### காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்பு பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெவியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதி காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1982, மாச்சு 25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுவ/பி/127 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான சாந்திபுர, நுவரெலியா என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி கமகே லிசி பிரனாந்து என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ/01/74 ஆம் இலக்கத்தின் கீழ் 1982.04.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமைக்கு எவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.12.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் கடவத்சத்தர பற்றிலுள்ள/கோரளையிலுள்ள 535 எம் சாந்திபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சாந்திபுர அல்லது கிகிலியாமான என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நுவரெலியா நில அளவை அதிபதி பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்க்பபட்ட எம் 6/42 ஆம் வெளிக்களத் தாளில் பி. பி. ஏ. 3140 ஆம் இலக்க துண்டுகள் பிரிக்கும் வரைபடத்தில் தாயரிக்கப்பட்ட - ஆம் இலக்க இரேகை வரைதாளில் 38 ஆம் இலக்கக் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஏக்கர் 00 றூட் 01 பர்சஸ் 10 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணி துண்டு:*

*வடக்கு : பி. பி. ஏ. 3140 இல் துண்டு இலக்கம் 36 மற்றும் 37;*
*கிழக்கு : கால்வாய்க்கான ஒதுக்கம்;*
*தெற்கு : பி. பி. ஏ. 3140 இல் துண்டு இலக்கம் 54;*
*மேற்கு : கால்வாய்க்கான ஒதுக்கம்.*

*ஏ. ஏ. விதுர சம்பத்,*
*பிரதேச செயலாளர்,*
*நுவரெலியா.*

*2022, மாச்சு 28.*

*11 - 60/5*

---

*இணைப்பு - 09*

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்பு பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெவியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ.ஏ.விதுர சம்பத் ஆகிய நான், காணி அபிவருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1996.05.14 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/நுவ/1455 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பட்டிபொல என்னும் முகவரியில் வசிக்கும் திரு. அகலவத்த ரோஹண அஜித் ஜயந்த சில்வா என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர், அலுவலகத்தில் நுவ/43/2465/96 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.09.02 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமைக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.12.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒயபலாத்த பற்றிலுள்ள/ கோரளையிலுள்ள பட்டிபொல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பட்டிபொல என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நுவரெலியா பிரதேச செயலாளர் பொறுப்பில் வைக்கப்படுட்ள்ளதும், அரச நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட து. பி. ஆ. வ. 54டி ஆம் இலக்க துண்டுகள் பிரிக்கும் வரைபடத்தில் - தாயரிக்கப்பட்ட - ஆம் இலக்க இரேகை வரைதாளில் 27 ஆம் இலக்கர் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் றூட் 02 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணி துண்டு:*

*வடக்கு : அரசாங்க வனம்;*
*கிழக்கு : துண்டு இலக்கம் 28*
*தெற்கு : துண்டு இலக்கம் 22 மற்றும் 23;*
*மேற்கு : துண்டு இலக்கம் 26.*

*ஏ. ஏ. விதுர சம்பத்,*
*பிரதேச செயலாளர்,*
*நுவரெலியா.*

*2022, ஏப்பிறல் 05.*

*11 - 60/6*

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்பு பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1988, பெப்ருவரி 08 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/நுவ/ 4903 ஆம் இலக்க அளிப்புபத்திரத்தின் உரிமையாளரான கல்பாலம நுவரெலியா என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி வயலட் ஜயசிங்ஹ என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர், அலுவலகத்தில் நுவ/8/452/88 ஆம் இலக்கத்தின் கீழ் 1988.04.04 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.12.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒய பலாத்த பற்றிலுள்ள/கோரளயிலுள்ள 535 பீ ஜயலங்கா கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கல்பாலம என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நுவரெலியா நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தாயரிக்கப்பட்ட எம்.44/6 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்ட பி. பி. நு 541 ஆம் இலக்கம் இரேகை வரைதாளில் 12 2/2 ஆம் இலக்கக் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ஏக்கர 00 றூட் 00 பேர்ச்சஸ் 25 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணி துண்டு:

வடக்கு : பி. பி. நு. 541 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 12 1/2;
கிழக்கு : பி. பி. நு. 541 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 9 1/2;
தெற்கு : பி. பி. நு. 541 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 21;
மேற்கு : பி. பி. நு. 541 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இலக்கம் 11.

ஏ. ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2022, யூன் 20.

11 - 60/7

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/69908.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : NCP/PLC/L03/LEKI (ii).

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

அநுராதபுர மாவட்டம் கெகிராவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 615 ஹௌா புளியங்குளம கிராம அலுவலர் பிரிவில் கொஸ்சாகம ஹெவத் நாவக்குளம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 2021/KEKI/08 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் சுமார் 7.0519 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் திரு. கலப்பத்திகே பேமரத்ன என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : அரச காணி (அ. க. பி 1202 இல் 63 இன் பகுதி);
கிழக்கு : அரச காணி (அ. க. பி 1202 இல் 63 இன் பகுதி);
தெற்கு : அரச காணி (அ. க. பி 1202 இல் 63 இன் பகுதி);
மேற்கு : அரச காணி (அ. க. பி 1202 இல் 63 இன் பகுதி).

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடிதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது (30) வருடங்கள் (2022.10.15 ஆந் திகதியிலிருந்து 2025.10.04 ஆந் திகதி வரை)

**வருடாந்தக் குத்தகை.**- 2022 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2022 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும்.

இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

**தவணைப்பணம்.**- அறவிடப்படமாட்டாது

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர் மனம் திருப்த்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.10.05 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தல் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டி. டி. நவோத்யா சீ. கருனாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.10.20

11 - 58

---

காணி ஆணையாளர் நாயகம் இல.: 4/10/18643.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. : என் சீபீ/பீ/எல்சி/2004/10/09/மெ.நி.

## காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்

வட மத்திய மாகாண அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள கெகிராவ பிரதேச செயளாளர் பிரிவுக்கு சொந்தமான இல. 628 துலான கெகிராவ கிராம அலுவலரினால் உருவாக்கிய மொத்த கண்காணிப்பின்படி பேர்ச்ஸ் 3.985 பரப்பளவுள்ள அரச காணி வியாபார நோக்ககத்திற்கான அப்துல் காதர் ஜெயிளாப்தீன் என்பவரினால் குத்தகைக்கு தருமாறு கேட்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரியப்படுத்தப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் கீழ்வருமாறு:

வடக்கு : சரீப் லெப்பை மொகமட் மதீன் உடைய காணி;
கிழக்கு : தம்புள்ளை கெகிராவ பிரதான வீதி;
தெற்கு : அஸீஸ் நூருல் ஹிதாயா பீபியின் காணி;
மேற்கு : முஸ்லிம் பள்ளிக்கு உரித்தான காணி;

03. விண்ணபித்து இருக்கும் காணி தேவைப்பட்ட காரணத்திற்காக குத்தகைக்கு கொடுக்க முடியும். அதன்படி அரசினால் ஏற்றுக்கொள்ள கூடிய மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ், காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

(அ) **குத்தகை காலம்** .-முப்பது வருடங்கள் (30) (1995.6.15 இலிருந்து 2025.06.14 வரை)

**வருடாந்தக் குத்தகை பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின், மதிப்புப்படி 1995 ஆம் ஆண்டின்

விற்பனை மதிப்பீட்டின் 4% ஆகும். இந்த குத்தகை பணம் 5 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டும். அவ்வாறு கடந்த 5 வருடங்களின் கடைசியாக பெற்றுக் கொண்ட தொகையின் 50% க்கு அதிகமாக இருக்க முடியாது.

**தண்டப்பணம்.-** காணியின் வளர்ச்சி விலையின் 4% ஆன அதன் மூன்று மடங்காகும்.

(ஆ) காணியை பெற்றுக் கொண்ட 1 வருடத்திற்குள் பிரதேச செயளாளரின் மன நிறைவைப் பெரும் படியான முறையில் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) காணியை குத்தகைக்கு பெற்றுக் கொண்டவர், வியாபார நோக்கத்திற்காக மட்டும் அன்றி வேறு எந்த நோக்கத்திற்காகவும், பாவிக்க கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் செய்யப்பட்டுள்ள வேறு ஏதாவது விசேஷ நிபந்தனைகளுக்கு இந்த குத்தகை உட்பட்டுள்ளது;

(எ) நிர்மாணித்திருக்கும் கட்டிடம், நேர்தியான முறையில் அபிவிருத்தி செய்து நாடத்தப்பட வேண்டும்;

(ஏ) குத்தகைக்கு வழங்கப்பட்ட காலத்தினுள் குத்தகைக்காரர் பெற்றுக் கொண்ட காரணங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் போனால், குத்தகையை முடிவிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஐ) 1995.06.15 ஆந் திகதியில் இருந்து ஐந்து வருடங்கள் கடக்கும் வரை, குடுப்பத்தினர் இடையே, பணி நியமனம் செய்தல் அல்லது இந்தக் காணியை குத்தகைக்கு பெற்றுக் கொண்ட காரணத்தை நிறைவு செய்வதற்காக, இடைக் கால குத்தகைகக் வழங்கல் அல்லது பணி நியமனம் செய்தல் அன்றி வேறு ஏதாகிலும் இடைக் கால குத்தகைக்கு வழங்குதல், அல்லது பணி நியமனம் செய்தல் ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஒ) குத்தகை கூலியை தவறாமல் செலுத்த வேண்டும், அல்லது குத்தகை கூலியை செலுத்த தவறும் இடத்து, ஒப்பந்தம் தன்னிச்சையாக முடிவுறும்.

கீழ் கூறிய தினத்தில் இருந்து 06 வாரங்களுக்குள், சம்பந்தப்பட்ட காணியை குத்தகைக்கு வழங்கக் கூடாது என்பதற்குரிய, ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களை எழுத்து மூலம் என்னிடம் அறிவிக்காவிட்டால் விண்ணப்பத்திற்கு ஏற்றவாறு குத்தகைக்கு வழங்கப்படும்.

டீ. டீ. நவோத்யா சீ. கருணாரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022.10.14.

11 - 59

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2022**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 04.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.102022 |
| | | வெள்ளி | 11.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.10.2022 |
| | | வெள்ளி | 18.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.11.2022 |
| | | வெள்ளி | 25.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.11.2022 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 02.12.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.11.2022 |
| | | வெள்ளி | 09.12.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.11.2022 |
| | | வெள்ளி | 16.12.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.12.2022 |
| | | வெள்ளி | 23.12.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.12.2022 |
| | | வெள்ளி | 30.12.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.12.2022 |

**அட்டவணை - 2023**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வியாழன் | 05.01.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.12.2022 |
| | | வெள்ளி | 13.01.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.12.2022 |
| | | வெள்ளி | 20.01.2023 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.01.2023 |
| | | வெள்ளி | 27.01.2023 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.01.2023 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.